Registered as a Newspaper

A/L Day Class
(விஞ்ஞானம்)
புதிய 2.ம் பிரிவு
ஆரம்பம்: 5-11-86
காலை 8-15
Bond INSTITUTION JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

A/L சனி - ஞாயிறு
வகுப்புகள்
8-30 PHYSICS
மின்னியல்
Mr. நந்தகுமார் B.Sc.
12-30 ZOOLOGY
முளையவியல்
Mr. ஈசன் B.Sc.
ஆரம்பம்:- 9-11-86
BOND INSTITUTION JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ ஐப்பசி மீ 16 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 28 (02-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 296

★ தென்னாபிரிக்காவிலிருந்து வந்த

# 'பவ்விள்' வாகனம் நிலக்கண்ணியில் சிக்கிச் சுக்குநூறு

## 3 பேர் பலி: 5பேர் காயம்

### றூகத்தில் தீபாவளித் தாக்குதல்

மட்டக்களப்பு நவம்பர். 2

கண்ணி வெடிக்குத் தாக்குப் பிடிக்குமென விசேடமாகத் தருவிக்கப்பட்ட வாகனமான 'பவ்விள்' தமிழ்ப் போராளிகள் நடத்திய தாக்குதலில் சுக்கு நூறுகியது.

தென்னாபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது 'பவ்விள்'. செங்கலடி --- பதுளை வீதியில் உள்ள றூகத்தில் தீபாவளி தினமான நேற்று நடந்த நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தில் அது சிக்குண்டு சின்னாபின்னமாகச் சிதறியது.

'பவ்விள்' வாகனத்தில் சென்ற சிப்பாய்களில் மூவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். ஐவர் படுகாயமடைந்தனர். ஒருவரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இந்தக் கண்ணிவெடியினால் அப்பகுதியிலிருந்த மின்கம்பங்கள் சரிந்தன. வயர்கள் அறுந்து தொங்குகின்றன. இதனால் அப்பகுதியில் முற்ருக மின்சாரம் தடைப்பட்டிருக்கிறது.

செங்கலடி-பதுளை வீதியில் றூகம் என்னுமிடத்தில் இந்த நிலக்கண்ணி வெடித் தாக்குதல் நடந்தது. அதனால் 3 சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

ஒரு சிப்பாயைக் காணவில்லை. ஐந்து சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் 2-45 மணியளவில் இக்கண்ணி வெடித் தாக்குதல் இடம் பெற்றது.

கரடியனாறு முகாமில் இருந்து புல்லுமலை நோக்கிச் சென்று கொண்டிருந்தபவ்விள் (BUFFLE) வாகனமே நேற்றைய தாக்குதலில் சிக்கிச் சுக்கு நூறுகியது.

படுகாயமடைந்த சிப்பாய்கள் உடனடியாக பொலனறுவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்கள் விமானம் மூலம் கொழும்பு கொண்டு போகப்பட்டன. (உ-எ-21-1

புலிகள் தாக்குதல்

## கண்ணிவெடியில் ஜீப் சேதம்

### பெரியபோரதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 2

பெரிய போரதீவு வழியாக வெள்ளி பிற்பகல் மூன்று ஜீப்களில் வந்து கொண்டிருந்த கொமாண்டோக்களை தமிழீழவிடுதலைப் புலிகள் கண்ணி வெடி வைத்துத் தாக்கியதில் முன்னால் வந்த ஜீப் வண்டி பலத்த சேதமடைந்தது.

இப்படி விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கண்ணிவெடியின் பின்பு ஏற்பட்ட நேரடி மோதலின்போது காயமடைந்த, கொல்லப்பட்ட கொமாண்டோக்களையும் எமது எதிர்த்தாக்குதலின் மத்தியில் ஹெலிக்கொப்டர்கள் ஒன்றின் மூலம் ஏற்றிச் சென்றனர்.

இறுதியில் சேதமடைந்த ஜீப் வண்டியை அவ்விடத்திலேயே விட்டு விட்டு ஏனைய கொமாண்டோக்கள் இரு ஜீப்வண்டிகளிலும் பின்வாங்கி விட்டனர்.

இத்தாக்குதலின் இறுதியில் கொமாண்டோக்களின் ஹெல்மட்டுக்கள் அவ்விடத்தில் காணப்பட்டன.

--இப்படி புலிகள் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## மினி சினிமாக்களில் தணிக்கைக்குள்ளான படங்களே காண்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ.2

மினி சினிமாக்களில் காண்பிக்கப்படும் படங்கள் அனைத்தும் தணிக்கைக் குழு ஒன்றினால் பரிசிலனை செய்யப்பட்ட பின்னரே காட்சிக்கு அனுமதிக்கப்படும்.

இப்படி மினிசினிமா ஒன்றியம் அறிவித்திருக்கிறது.

கலாசாரச் சீரழிவைத் தடுப்பதற்காக மினி சினிமா ஒன்றியம் தணிக்கைக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தணிக்கைக்கு உட்படுத்தப்படாதபடங்கள்பறி முதல் செய்யப்படும் என்றும்-

நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை புதிய மினி சினிமா நிறுவனங்களுக்கான லைசென்ஸ் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது என்றும்-

அத்துடன் சுகாதார வசதி குறைந்த மினி சினிமாக்கள் இரு வாரத்தினுள் அவ்வசதிகளைப் பூர்த்திசெய்யாவிட்டால் அந்நிறுவனங்களின் ஒத்திசைவுப் பத்திரங்களும் இரத்தாகும் என்றும் மினிசினிமா ஒன்றியம் அறிவிக்கின்றது. (உ)

## அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், நவ. 2

வெள்ளிக்கிழமை யாழ் கோட்டை முகாமுக்கு முன்பாக சுடப்பட்டு மரணமான பெண்மணி ஒருவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

நயினாதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த பரமலிங்கம் தேன்மொழி அம்மை (61 வயது) என்பவரே மரணமானதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் மனநோய் காரணமாக சேர்க்கப்பட்டிருந்த இவர் கடந்த 28ஆம் திகதியில் இருந்து காணாமல்போய் விட்டதாகவும்.

பின்னர் இவர் கோட்டை முகாம் முன்பாக இறந்துவிட்டதாக அறிந்ததாகவும் இவரது சடலத்தை அடையாளம் காட்டிய எஸ். கே. பொன்னையா தெரிவித்தார். (உ-10)

முச்சந்தி முனி



எங்கையிருந்து என்னத்தைக் கொண்டு வந்தாலும் எங்கடை பெடியள் அதுகளுக்கும் மேலாலை ஏதாவது செய்வினம் எண்டதை உவை இனிமேல்உணர்வினமோ பின்னை...... !

## கிறனேட் வீச்சு

மட்டக்களப்பு, நவ. 2

ஏறாவூர் - செங்கலடி வீதியில் நேற்று நண்பகல் அளவில் ரோந்து புரிந்த ஆயுதப்படையினர் மீது கிறனேட் வீசப்பட்டது.

சேத விவரம் பற்றி தெரியவில்லை. (உ-எ-21

## லொறியில் வந்த மூவர் காயம்!

மட்டக்களப்பு, நவ. 2

அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்துக்கு முன்னால் சைகை காட்டியும் நிறுத்தாமல் போனதாகக் கூறப்படும் லொறி ஒன்றின் மீது பொலீஸார் கடந்த வியாழன் அதிகாலை துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இதனால் லொறியின் சாரதியும் கிளீனரான ஹமீத், ரஸீக் ஆகியோரும் காயமடைந்தனர். (உ-எ-21]

சுபநேரம்

02-11-1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

9.04 முதல் 10.34 வரை

ராகுகாலம்:

4.34 முதல் 6.04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம்

## இன்று கந்தசஷ்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.2

இன்று கந்தசஷ்டி விரதாரம்பம். முருகப்பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்பெறும் மஹிமை வாய்ந்த ஒரு விரதமாக இது கருதப்படுகின்றது.

இதனை முன்னிட்டு இன்றுமுதல் தொடர்ந்து ஆறு நாட்களுக்கு சகல முருகன் ஆலயங்களிலும் விசேஷ பூசையும் வழிபாடுகளும் இடம்பெறுகின்றன.

விசேட அம்சமாக கந்தபுராணப் படிப்பும் பயன் சொல்லலும் நடைபெறும். விரதம் அனுஷ்டிப்போர் இதனைக் கேட்டுப் பயன் பெறுவர். (உ)

## கொழும்பில் தேடுதல் 200 இளைஞர்கள் காவலில்

கொழும்பு, நவ. 2

ஆயுதப் படையினரின் கொழும்பு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடத்திய திடீர்த் தேடுதலில் இருநூறுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்களும் சில சிங்கள இளைஞர்களும் கைதாகினர்.

சிலர் விடுதலை செய்யப்பட்டனர். பெரும்பாலோர் பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

வெள்ளி இரவு 11.30 மணியளவில் ஆரம்பமான தேடுதல், நேற்று அதிகாலை வரை நீடித்தது.

கொழும்பு மாநகரில் வெள்ளி இரவு பெரும் அசம்பாவித சம்பவம் ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இத்தேடுதலைப் படையினர் நடத்தினர். (உ-எ1)

# தமிழர் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதொன்றே சமாதானத்துக்கு வழி

### ஆயுதத்தைக் கீழே போடக்கேட்பதால் பயனில்லை என்கிறார் வண பிதா கஸ்பேர்ஸ்

யாழ்ப்பாணம், நவம்பர். 2

போராளிகளைப் பார்த்து "ஆயுதங்களைக் கீழே போடுங்கள்" என்று குரல் கொடுப்பதால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

மாறாகத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வது மூலம், அவர்களின் நீதியான கோரிக்கைகளை ஏற்பதன் மூலம் மட்டுமே சமாதானத்தை உருவாக்க முடியும்.

யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஆயர் லக்ஷ்மன்விக்கிரமசிங்க நினைவு தினக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய வணபிதா போல் கஸ்பேர்ஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

வணபிதா. ஜெயசீலன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். வணபிதா போல் கஸ்பேர்ஸ் தொடர்ந்து கூறியதாவது:-

கத்தோலிக்க திருச்சபை ஆரம்ப காலந் தொடக்கம் கத்தோலிக்கரை சமுதாய நீரோட்டத்தில் இருந்து பிரித்துத் தனிமைப் படுத்தி இருந்தது.

ஏனைய கிறிஸ்தவ பிரிவுகளிடமிருந்தும் கூட தனிமைப்படுத்தி இருந்தது.

ஆனால் 1956 ஆம்ஆண்டின் பின்னர் கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. பிற்போக்குத் தன்மை கைவிடப்பட்டது.

ஏனைய மக்கள் பிரிவினருடன் கைகோர்த்து தேசிய, பிராந்திய, சமூக, சமயப் பிரச்சினைகளை முகம் கொடுக்கவும்—

சமயத்திற்கு மாறான சமய சார்பற்ற கருத்துணர்வுகளுக்கும் மதிப்பளிக்கவும் கத்தோலிக்க திருச்சபை முன்வந்தது.

ஆனால் இவ்வாறு புதிய சமுதாயப் பார்வை மலரும் வேளையில் வகுப்புவாத உணர்வும் இனவாதப் போக்கும் தென்னிலங்கை கிறிஸ்தவர்கள் மத்தியில் உருவானமை கவலைதரும் நிகழ்வாகும்.

1956, 1958 ஆம்

(4 ஆம் பக்கம்பார்க்க)

## மேலும் இரு முகாம்கள்

மட்டக்களப்பு, நவ.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஆயுதப் படை முகாம்கள் இரண்டு புதிதாகத் திறக்கப்பட்டன.

உன்னிச்சை, பூமாச்சோலை ஆகிய இடங்களிலேயே இந்த முகாம்கள் திறக்கப்பட்டன. (உ-எ)

## வல்வையில் பக்தர்கள் மீது ஹெலி தாக்குதல்

வல்வெட்டித்துறை, நவ2

வல்வைப் பகுதியில் நேற்று தீபாவளித்தினத்தன்று காலையில் ஹெலிக்கொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

கோயிலில் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்த பக்தர்கள் உட்பட சுமார் 10 பேர் இதனால் காயமடைந்தனர்.

வல்வை சிவன் கோவில் வல்வை முருகையன் கோவில் ஆகியவற்றிற்கு அருகில் கூடிநின்ற பக்தர்கள்மீதே ஹெலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

பயத்தினால் சிதறிஓடிய பல பக்தர்கள் தடுக்கி விழுந்து காயமடைந்தனர்.

காயமடைந்த சிலர் உடனடியாக இளைஞர்களினால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் குறித்து வல்வை பிரசைகள் குழுவிடம் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. (உ·160)

## கிழக்கில் படையினர் உஷார் நிலையில்

கொழும்பு, நவ.2

கிழக்கு மாகாணத்தில் அரச ஆயுத படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமான உத்தரவுகள்பாதுகாப்பு வட்டாரங்களினால் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொலீஸ் நிலையங்கள் ஆயுத முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்துக்கு பெரும் எண்ணிக்கையில் போராளிகள் வந்துள்ளனர்.

பொலீஸ் நிலையங்கள் மீது திடீர்த் தாக்குதல்கள் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் - இப்படி பாதுகாப்பு வட்டாரங்களுக்கு புலனாய்வு அறிக்கைகள் கிடைத்ததைத் தொடர்ந்தே ஆயுதப் படையினரை உஷார் நிலையில் வைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-1)

### தாக்குதல்

கல்முனை, நவ, 2

பெரியபோரதீவு பகுதியில் நேற்றுப் பகல் விமானத் தாக்குதல் இடம்பெற்றதாக கல்முனையில் இருந்து நேற்றுக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன (உ-எ)

வெளிநாட்டு ஏஜென்ஸி

## அனுமதிப் பத்திரம்

### குறித்து ஈ.பி.ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 2

சகல வெளிநாட்டு முகவர் நிலையங்களும், வெளிநாட்டுப் பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் (ரவல் ஏஜென்ஸி) நிலையங்களும் எமது அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளக்கோரும் விண்ணப்பப் படிவங்களை நவம்பர் 5 ஆம்திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து தமது காரியாலயத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இப்படி ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்திசெய்து அனுப்பியவர்கள் மட்டுமே எமது அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளத் தகுதி உடையவர்களா எனப் பரிசீலிக்கப்படுவர்.

விண்ணப்பப் பத்திரங்களை நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள எமது ஈழத் தேசிய நிர்வாகச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

--இப்படி ஈ. பி. ஆர். எல். எவ், விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

இளவல்களின் அறிவுப்பசிக்கு
விருந்து படைக்க
வந்துவிட்டான்!
"அர்ச்சுனு"
★ அறிவுலக அறிமுகம்
★ கணிதப்புதிர்
★ எண் சிலம்பம்
★ பயணம் தந்த பாடம்
★ சிந்தனைக் கட்டுரைகள்
★ குட்டிக் கதைகள்
★ கருத்தோவியங்கள்
★ கணனி நிகழ்ச்சித் திட்டம்
★ சிந்தனைக் கருவூலங்கள்
உதயன் நிறுவனம் வழங்கும்
"மற்றொரு பரிசு"
அர்ச்சுனு
(திங்கள் இதழ்)
கண்கவர் வர்ண அட்டைப் படத்துடன்
அர்ச்சுனு விற்பனையாகின்றான்
நமது விநியோகஸ்தர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.
விலை ரூபா 3-00 மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்ம சாந்தி பூசைக்காக பலத்த காவல்

மட்டக்களப்பு, ,நவ. 2

இனந்தெரியாத நபர்களினால் செப்டம்பர் மாதம சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு உதவிப் பொலீஸ் அதிபரின் புதல்வனை தியோக்குமாரின் 30 ஆவது தினத்தை ஒட்டி புதனன்று கோட்டைமுனைப் பகுதியில் ஆயுதப்படையினர் பலத்த காவல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்

கோட்டைமுனை தேவாலயத்தில் தியோக்குமாரின் ஆத்மசாந்திப் பூசை புதனன்று இடம் பெற்றதே இதற்குக் காரணம். (உ-எ-21)

## கத்தோலிக்க ஆசிரியர் சங்க நிறைவு விழா

கரவெட்டி, நவ. 2

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க ஏழாவது ஆண்டு நிறைவு தினப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ் மறைக்கல்வி நிலையத்தில் திரு. ஏ. எஸ். அகஸ்ரின் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருள்திரு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா.சுந்தரலிங்கம்யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருள்திரு எஸ் ஏ. மைக்கல்சாமி அடிகளார், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

பாரதி பிள்ளைத் தமிழ் பாடிப் பாராட்டுப் பெற்ற அரச பொற்கிழிப் புலவர் பண்டிதர் வித்துவான் க. த. ஞானப்பிரகாசம் பொன்னுடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார். (இ.70)

பூரணமான ஆய்வின்றி செயற்படாதீர்!

# குளங்களை ஆழமாக்கும் பணி: உடன் நிறுத்த கோருகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவ. 2

குளங்கள் ஆழமாக்கும், வண்டலகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சகல தனியார், பொது நல ஸ்தாபனங்கள் தாங்கள் நடத்தும் திருத்த வேலைகளை உடன் நிறுத்தி தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

யாழ் குடாநாட்டிலுள்ள சகல குளங்களிலும் வண்டலகற்றுவதாலும், ஆழமாக்குவதாலும் மேலதிக நீரை சேமித்து வைப்பது தொடர்பான கருத்தரங்கு யாழ் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் அரச அதிபர், மேலதிக அரச அதிபர், செயலக அதிகாரிகள், நீர்ப்பாசன, கமநல சேவை, நீர்வள அதிகாரிகள், ஊற்று, றெடோ நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

* குளங்களின் படுக்கைக்கடியில் குறைந்தது 3 அடி 'களிமண்படை' இருக்கக்கூடியதாகவிடப்படல் வேண்டும்.
* ஒவ்வொரு குளமும் தகுந்த முறையில் தனிப்பட்ட ரீதியில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வண்டல் அகற்றல் தேவைப்படும் பட்சத்தில் மட்டும் இதனை மேற்கோள்ள வேண்டும்.
* நீர்த்தேக்கம், வடிகாலமைப்பு போன்ற அம்சங்களை உள்ளடக்கிய பிரதேசங்களிலுள்ள குளங்களுக்கு நீண்ட காலம் நன்மை பயக்கும் ஒரு கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டு பின்னர் நிதி வசதிக் கேற்ப,பகுதி பகுதியாக செயல் முறைப்படுத்தப்படுவதற்கு ஏற்றவகையில் நீண்டகாலத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

இதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. அதில் கமநலச் சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம், றெடோ நிறுவன பொறியியலாளர் திரு. த.குணசேகரம், ஊற்றுநிறுவன பொறியியலாளர் திரு. சி. நடராசா, திரு. விக்னேஸ்வரன்,நீர்ப்பாசன, நீர்வளச்சபை பொறியியலாளர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

வகுக்கப்பட்ட கொள்கைத் திட்டங்கள் மக்களின் கவனத்திற்கு அறியத் தரப்படும் வரை ஏலவே அனுமதி பெற்ற வேலைகள் நடைபெறும் பிணுக்காய்க் குளம் தவிர்ந்த சகல குளங்களிலிருந்தும் ஆழமாக்கல், வண்டலகற்றல் போன்ற நடவடிக்கைகள் தடை செய்யப்படவேண்டும் எனவும் இக்கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது. (உ - 5)

## வர்த்தகர் சங்கம்

பலாலி, நவ, 2

அச்சுவேலிப்பகுதி வர்த்தகர்கள், வர்த்தகர் சம்மேளனம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

பொது மக்களுக்கான ஒருமித்த வர்த்தக சேவையினை சீராக மேற்கொள்ளவும் —

அடிக்கடி ஏற்படும் கொள்ளைகள், வேண்டாத தலையீடுகள் என்பவற்றைத் தவிர்க்கவும் இச்சம்மேளனம் தனது பங்களிப்பினை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-119)

## பட்டினியால் வாடும் அகதிகளின் அவலம்
### உதவ வேண்டுகோள்

நல்லூர் சங்கிலியன் முகாமில் உள்ள இருபத்தெட்டு அகதிக் குடும்பங்கள் கடந்த ஒருமாத காலமாக உணவின்றி கஷ்டப்படுகின்றன.

அரசு நிவாரணம் நிறுத்தப்பட்ட திருமலைக் கிராமங்களைச் சேர்ந்தவர்களே இந்த அகதிகள்.

செப்டம்பர் 15 ஆம் திகதியில் இருந்து இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் நிறுத்தப்பட்டு விட்டது.

அதன் பின்னர் அகதி முகாமில் இருந்து இக் குடும்பங்களை வெளியேறும்படி அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

ஆனால் அவர்கள் வெளியேற மறுத்து விட்டனர். 'நாங்கள் பழைய இடங்களுக்குச் சென்று வசிக்க முடியாத நிலை. பின்னர் எங்கு சென்று வசிப்பது? இப்படி அவர்கள் கேட்கிறார்கள்.

இப்போது அவர்கள் உண்ண உணவின்றி அகதி முகாமில் அல்லற்படுகின்றனர்.

அகதிகளின் சார்பாக திரு. வேலாண்டி வேலாயுதம் என்ற அகதி 'உதயன்' அலுவலகம் வந்து 28 குடும்பங்களின் கஷ்டங்களைக் கூறிக் கண்ணீர் உகுத்தார்.

'எங்களைக் காப்பாற்ற ஒருவருமே இல்லையா? வர்த்தகர்களே, இயக்கத் தோழர்களே இந்த 28 குடும்பங்களையும் காப்பாற்றுங்கள்'— இப்படி அவர் 'உதயன்' மூலம் வேண்டுகோள் விடுத்தார். (உ—எ)

## இலங்கைத் தூதரக அதிகாரிகள் கனேடிய பிரசாவுரிமை கோரி மனு

ஒட்டாவா, நவ. 2

கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் இரண்டு சிங்கள அதிகாரிகள் கனேடிய பிரசா உரிமை கோரி மனுச்செய்திருக்கின்றனர்.

பிரான்ஸிஸ் ஜெயகொடா, கமகே வணிகபிட்டிய ஆகியவர்களே அந்த அதிகாரிகள்.

இவர்களின் பதவிக் காலம் முடிந்துவிட்டது.

இவர்களை இலங்கை திரும்பும்படி இலங்கை வெளிநாட்டு அமைச்சு பணித்தது.

ஆனால் இருவரும் இலங்கை திரும்ப மறுத்து விட்டனர்.

அது மட்டுமல்ல, கனடா நாட்டின் பிரசா உரிமை கோரி மனுச் செய்துள்ளனர்.

இதற்கிடையில் கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் உள்ள மனித உரிமைப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திரு. சி. டி. காசிச்செட்டி என்ற இலங்கையருக்கு விசா வழங்க கொழும்பில் உள்ள கனேடியத் தூதரகம் மறுத்துவிட்டது.

கனேடிய பிரசா உரிமை கோரியுள்ள இரண்டு இலங்கை அதிகாரிகளையும் இலங்கை அரசு திருப்பி எடுக்கும் வரை, திரு. காசிச்செட்டிக்கு விஸா வழங்க முடியாது என்று கொழும்பில் உள்ள கனடா தூதரக அதிகாரிகள் அறிவித்துவிட்டனர். (இ-எ-21)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## பயங்கரவாதம் பற்றி இலங்கையுடன் பாக். கூட்டாகக் குரல் எழுப்புமாம்

இஸ்லாமாபாத் நவ. 1

'சார்க்' உச்சி மாநாட்டில் பயங்கரவாதம் பற்றி இலங்கையுடன் சேர்ந்து குரல் எழுப்ப பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக பெங்களூர் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கையுடன் கொழும்பில் ஒரு மாநாட்டை நடத்த வேண்டும் என்ற தன் விருப்பத்தை பாகிஸ்தான் வெளியிட்டுள்ளது.

இது சம்பந்தமாக பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சு, இலங்கைக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் வேண்டுகோளை இலங்கை தற்போது பரிசீலனை செய்து வருகிறது.

இலங்கை இதற்கு சம்மதித்தால் 'சார்க்' உச்சி மாநாட்டில் பயங்கரவாத ஒழிப்பு குறித்து கூட்டாக எடுக்கவிருக்கும் நிலைப்பாடு குறித்து பேச்சுக்கள் நடத்த பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் குழு அடுத்த வாரம் அளவில் கொழும்பு வரலாம் என்று தெரிய வருகிறது.

தமிழ்த் தீவிரவாதிகள் தமிழ் நாட்டில் இருந்து இயங்குகின்றனர் என்று இலங்கை குற்றம் சாட்டுகிறது.

ஆனால் இந்தியாவோ தமிழ்த் தீவிரவாதிகளை, போராளிகள் என்று அழைக்கின்றது.

இதனிடையில் சீக்கியத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளிப்பதாக இந்தியா குற்றம் சாட்டி உள்ளது.

அதே நேரத்தில் சிந்து மாகாணத்தில் உள்ள கிளர்ச்சியாளர்களுக்கு இந்தியா உதவி அளிப்பதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டுகிறது.

இந்தச் சூழ்நிலையில் பெங்களூரில் நவம்பர் நடுப் பகுதியில் ஆரம்பமாக உள்ள 'சார்க்' உச்சி மாநாட்டில் 'எல்லை பயங்கரவாதம்' நிகழ்ச்சியே முக்கியம் இடம் வகிக்கப் போகின்றது.

## மக்கள் முகம்

### தொண்டமான் நகர் கி. அ. ச. நிர்வாகிகள்

கிளிநொச்சி, நவ. 2

கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவு தொண்டமான் நகர் கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக எம். ஏ. நமசிவாயமும், உபதலைவர்களாக எஸ். வீரசிங்கம், கே. ஸ்ரீகாந்தன் ஆகியோரும் செயலாளராக எஸ். சபாரத்தினமும், உபசெயலாளராக என். நாகேஸ்வரனும் பொருளாளராக எஸ். இராமச்சந்திரனும் தெரிவாகினர்.

ஏழு பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-76)

### அபி. சபை நிர்வாகிகள்

வேலணை, நவ. 2

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சபைக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. மு. சிவராசரெத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. மு. சிவராசரெத்தினம், உப தலைவர்கள்:- திரு. இ. க. நாகராஜா திரு. க. நவரெத்தினம் செயலாளர்:- திரு. வா. தவச்செல்வம் பொருளாளர்: திரு. கு. மகாலிங்கம்

25 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-167)

### அறிவகம் சன சமூக நிலைய நிர்வாகிகள்

அச்சுவேலி, நவ. 2

புத்தூர் 'அறிவகம்' சனசமூக நிலையத்தின் புதுவருட நிர்வாகிகள்.

தலைவர்: திரு. வ. க. இராசேஸ்வரன் உபதலைவர்: திரு. க. ஆனந்தராசா செயலாளர்: திரு. மா. இரவீந்திரமணி உப செயலாளர்: திரு. சி. சதானந்தன் பொருளாளர்: திரு.மா. அண்ணுச்சாமி.

நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் ஏ. செல்லையா, த. கந்தசாமி, செ. கந்தசாமி, சி. ஜெயேந்திரன். (இ-11)

### மட்டக்களப்பு சம்பவங்கள்

மட்டக்களப்பு, நவ. 2

மட்டக்களப்பு கல்லடித்துறையில் 4 தமிழரை ஆயுத படையினர் வியாழனன்று கைது செய்தனர்.

அப்பகுதி அரிசி ஆலை ஒன்றில் வேலை செய்பவர்கள் இவர்கள்.

வழமையாக வியாழன் தோறும் மட்டக்களப்புக்கு ஆயுதபடையினரின் விமானம் வருவது உண்டு.

30ஆம் திகதியும் வியாழக்கிழமை. இதனால் மட்டக்களப்பு நகரில் ஆயுத படையினர் பலத்த காவலில் ஈடுபட்டிருந்தனர். அப்போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள லலிதா நகை மாளிகை உரிமையாளரான சற்குணம், வியாழன் காலை ஆயுத படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

விசாரணையின் பின்னர் அன்று மாலை அவர் விடுவிக்கப்பட்டார்.

இதனிடையில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட முஸ்லிம் வர்த்தகர் இக்பால் வியாழனன்று விசாரணையின்பின்னர் விடுவிக்கப்பட்டார்.

வாழைச்சேனைத் தேடுதலில் கைதான 246 தமிழரில் 40 பேர் வியாழனன்று விடுவிக்கப்பட்டனர்.

ஏனையோர் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கிழக்கிலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் கைதான சுமார் 75 மாணவரில் 3பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். (இ-எ-21)

### பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

பலாலி நவ - 2

இன்று நடைபெறவிருந்த அரசாங்க மருத்துவ மாதர் சங்க வருடாந்தக் கூட்டம் தவிர்க்க முடியாத சூழ்நிலைக் காரணங்களால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை 9 ஆம் திகதி நடைபெறும் என மேற்படி சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (உ-119)

## போராளிகளின் நிலைப்பாட்டை ஆதரித்து 'இந்து' ஆசிரியர் தலையங்கம்

சென்னை, நவ. 1

தமிழ்ப்போராளிகளின் நிலைப்பாட்டை ஆதரித்தும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் அணுகுமுறையைக் கண்டித்தும் சென்னையில் இருந்து வெளியாகும் 'இந்து' ஆங்கில நாளிதழ் ஆசிரியர் தலையங்கம் ஒன்றை எழுதியிருக்கிறது.

அக்டோபர் 28-ஆம் திகதி இதழில் இத்தலையங்கம் பிரசுரமானது.

வடக்கு — கிழக்கு இணைப்பு விவகாரத்தை குறைத்து பிரதமர் காந்தி மதிப்பிடுகிறார்.

வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் சிங்களப் பகுதி ஒன்று இருப்பதாக பிரதமர் தப்பெண்ணம் கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது.

இணைப்புப் பிரச்சினைக்கு பதில் சொல்லும் வகையில் இலங்கை அரசின் யோசனைகள் இருக்க வேண்டும் என்பது இந்தியாவின் எதிர்பார்ப்பாக அமைய வேண்டும்.

போராளிகளின் தொண்டைக்குள் திணிக்கும் நோக்கத்தைவிடுத்து இலங்கை யோசனைகளின் முன்னேற்றத்தை மையமாக வைத்தே பிரதமர் காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் பெங்களூரில் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும்.

இப்படி 'இந்து' ஆசிரியர் தலையங்கத்தில் பிரதமருக்கு வேண்டுகோள் விடப்பட்டு உள்ளது. (இ-எ-ஜ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மனிதர்களே! சிறந்த ஆலயம், அதைவிட்டு வெளியே கடவுளைத் தேடாதீர். பயனில்லை.

-சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - நடுநிலை - நேர்மை

இல. 15, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22073
02-11-1986 த. பெ. இல. 23

# தமிழர்மீது வேட்டை; அரசு நிறுத்த வேண்டும்

யாழ்ப்பாணம் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட துப்பாக்கி வேட்டு பாடசாலைமாணவனின் உயிரைக் குடித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் பொன்னம்பலம் விபுலானந்தன் பாடசாலை நேரத்தில், பள்ளிக்கூடத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்!

ஓநாய் வந்ததாகப் பலநாள் பகிடி விட்ட மந்தை மேய்ப்பவனின் ஆடுகளை, ஒரு நாள் உண்மையாகவே ஓநாய் வந்து இரையாக்கியதாக ஒரு கதை உண்டு.

யாழ் கோட்டையின் ஷெல் குண்டு எப்போதாவது ஒருநாள் யாழ் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் மேல் விழுந்து மாணவ மாணவியர் உயிரைக் குடிக்கும் அபாயம் உண்டு என்ற அச்சம் பல மாதங்களாக நிலவியது.

ஷெல் வரும், ஷெல் வரும், மாணவர் உயிரைக் குடிக்கும், மாணவர் உயிரைக் குடிக்கும் என்ற அச்சம் பகிடியாக இருக்கவில்லை. மாணவர்கள், ஆசிரியர்களின் மனப்பீதியாக இருந்தது. ஒருநாள் ஓநாய் வந்த கதைபோல் ஷெல்லுக்குப் பதில் துப்பாக்கி வேட்டு வந்து யாழ் மத்திய கல்லூரி மாணவனின் உயிரைக் குடித்தேவிட்டது.

கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள பாடசாலை மாணவரின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை அரசாங்க இராணுவம் உறுதிப்படுத்திவிட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளர், அவர்களைப் பார்க்கவரும் உறவினர்கள், அங்கு பணி புரியும் டாக்டர்கள் ஊழியர்கள் ஆகியோரின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பது ஏற்கனவே இராணுவத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

கல்வி பயில வரும் மாணவர் கூடும் பாடசாலைகள் மீதும், நோயாளர் தங்கும் ஆஸ்பத்திரிமீதும், தாக்குதல் நடத்தும் விவகாரம் மிகவும் பாரதூரமானதாகும்.

பெரும் அளவிலான யுத்தம் நடக்கும் போதுகூட ஆஸ்பத்திரிகள், கல்லூரிகள், ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது சர்வதேசச் சட்டத்துக்கு முரணானதாகும்.

பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தம் நடக்கும் காலங்களில் பாதுகாப்புக் கருதிப் பொது மக்கள், பாடசாலைகளிலும், ஆலயங்களிலுமே தஞ்சம் புகுவது வழக்கம்.

சூறாவளி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் நடக்கும்போதும் மக்களுக்குப் புகலிடம் அளிப்பவை அவையே.

ஆஸ்பத்திரியோ அவற்றைவிடப் பிரதானமானது. மழையோ, வெள்ளமோ, சூறாவளியோ, யுத்தமோ எது நிகழ்ந்தாலும் 24 மணி நேரமும் இயங்கி மக்கள் உயிர் காப்பது ஆஸ்பத்திரி

இவற்றின் மகிமையும், மகத்துவமும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குத் தெரியாமல் இருக்க முடியாது.

ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள்மீது தாக்குதல் நடத்தும் ஸ்ரீலங்கா இராணுவம், அங்கிருந்து தான் போராளிகள் தம்மீது தாக்குதல் நடத்துவதாகக் காரணங்காட்டித் தப்பித்துக் கொள்ள முனைகிறது.

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இராணுவ முகாம்களை வைத்துக்கொண்டு, போராளிகள் மீது பதில் தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு தமிழரை மனித வேட்டை ஆடுகிறது ஸ்ரீலங்கா அரசு.

இரத்த வெறி பிடித்தவன்போல, தமிழ் மக்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கொல்லும் நோக்கம் அரசிடம் உண்டோ என்று எண்ண இடம் வைக்கிறது அது. மாணவர்களை அழிப்பதால் இளஞ் சந்ததியையே பூண்டோடு அழிக்கவும் அது இரகசியத் திட்டம் வகுத்திருக்கிறதா?

ஸ்ரீலங்கா அரசே, உனக்கு மனிதாபிமானம் உண்டு என்று உனது மனம் சொல்லுமானால், நீ சரியான சமாதானத்தை விரும்புவது உண்மையானால் தமிழ் மக்களை மனித வேட்டையாடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

தமிழரை அழிக்கும் திட்டம் உன்னிடம் இல்லை என்று உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டுமானால், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களையாவது உடனடியாக மூட வேண்டும்.

மக்களின் பாதுகாப்புக் கருதித்தான் நாம் போராளிகளுடன் பெரிய அளவில் மோதுவது இல்லை. அதனாலேயே அவர்களை வெல்ல முடியவில்லை. இவ்வாறு இராணுவ உயர் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

அவர்கள் அப்படியே சொல்லிக்கொண்டிருக்க இங்கு ஆஸ்பத்திரிக்கு வருபவரும், பாடசாலை மாணவர்களும் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

இந்த ஏமாற்று வேலையை உலகம் அறிந்துகொள்ள வேண்டும். இன ஒழிப்பில் ஈடுபடாத அரசாக இருப்பின் மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை உடனே அகற்றுமாறு ஸ்ரீலங்காவுக்குப் புத்தி புகட்ட வேண்டும் அதனைவிடத் தமிழ் மக்கள் உலகிடமிருந்து வேறு எதனை உடனடியாக எதிர்பார்க்க முடியும்?

உலக நாடுகளே!

# தென்னாபிரிக்கத் தொடர்புகளை முழு அளவில் துண்டியுங்கள்

## ஐ. நா. சபை தீர்மானம்

ஐ.நா. சபை., நவ.1

இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்க அரசுடன் அரசியல், பொருளாதார, தூதரக, பாதுகாப்பு, வர்த்தகம் உட்பட முழுத் தொடர்புகளையும் துண்டித்துக்கொள்ளுங்கள்.

உலகநாடுகள் அனைத்திடமும் இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கிறது ஐக்கிய நாடுகள் சபை.

ஐ நா. சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றிலேயே இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

நூற்றி நான்கு நாடுகள் இப்பிரேரணையை ஆதரிக்க அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜேர்மனி உட்பட பதினொரு நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. பதினைந்து நாடுகள் நடுநிலைமை வகித்தன.

தென்னாபிரிக்க அரசு நமீபியாவில் தொடர்ந்து சட்ட விரோதமாகக் குடியிருப்பதையும், அந்நாட்டைச் சுரண்டுவதையும் ஐ. நா. சபை பிறிதொரு தீர்மானத்தில் கண்டனஞ் செய்துள்ளது (உ-9)

## அமெரிக்கா குறித்து கடாபி

சர்வதேச சமுதாயத்திற்கு மத்தியில் அமெரிக்கா ஒரு முட்டாள்தனம் மிக்க பேராசை பிடித்த நாடு.

இப்படி வர்ணித்திருக்கிறார் லிபியத் தலைவர் கடாபி.

அமெரிக்கா பயங்கரவாத முறைகளையே நாடுகிறது. ஆகையினால் பதிலடி கொடுக்க நாமும் அந்த முறையையே நாடவேண்டியிருக்கிறது என்றும் கூறியுள்ளார் கடாபி.

## அவாமி லீக் எதிர்க்கும்

டாக்கா, நவ.1

பங்களாதேஷில் கடந்த நாலரை ஆண்டுகளாக இராணுவ ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் சட்ட ரீதியில் செல்லுபடியாக்க எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் எதிர்க்கப்படும்.

இவ்வாறு அவாமிலீக் தலைமையிலான எட்டுக் கட்சி கூட்டணி தெரிவித்தது.

இதனிடையே அரசியல் சாசன சீர்திருத்த மசோதாவை அங்கீகரிப்பதற்காக நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ளது (ஒ)

## பிரான்ஸ் ஆயுத விற்பனை தடை

பாரிஸ், நவ. 1

சிரியாவிற்கு ஆயுத விற்பனையை பிரான்ஸ் தடை செய்துள்ளது.

புதிதாக சிரியாவிற்கு ஆயுதம் விற்பனை செய்யும் ஒப்பந்தங்கள் எவையும் எதிர்காலத்தில் பிரான்ஸால் மேற்கொள்ளப்படுவதும் தடைபடுத்தப்படும். (ஒ)

## வெளி உலகில்

### ஆஸ்திரியா தூதுவரை விலக்கும்

வியன்னா, நவ.1

இஸ்ரவேலில் இருந்த தனது தூதரை விலக்கிக் கொள்ள ஆஸ்திரியா முடிவு செய்துள்ளது.

இஸ்ரவேலில் ஆஸ்திரியாவின் ராஜீக அந்தஸ்து குறைக்கப்பட்டதன் எதிரொலிதான் இந்த நடவடிக்கை. (ஒ)

### எகிப்தில் அணுசக்தி நிலையம்

கெய்ரோ நவ.1

மேற்கு ஜெர்மன் மற்றும் சர்வதேச அணுசக்தி அமைப்பின் உதவியுடன் அணுசக்தி சோதனை ஆய்வுகூடம் அமைக்க எகிப்து தயாராகி வருகின்றது. (ஒ)

# பெற்றோருக்கு யமனான பிள்ளை

செல்ம்ஸ் போர்ட், நவ.1

தத்து எடுத்து வளர்த்த பிள்ளையே பெற்றோருக்கும் அவர்களது குடும்பத்திற்கும் யமனாகினான்.

தன்னை வளர்த்த பெற்றோர்களின் சொத்துக்களை அபகரிப்பதற்காக தனது குடும்பத்தவர்கள் ஐவரை கொலை செய்திருக்கிறான் இந்த 25வயது இளைஞன்.

ஜெர்மி பம்பர் என்ற இந்த இளைஞனுக்கு 25 வருடத்திற்கு குறையாத ஆயுள் சிறைத்தண்டனை விதித்திருக்கிறது இங்கிலாந்து நீதிமன்றம்.

தனது பெற்றோர்களான நெவில், ஜுன் (இருவருக்கும் 61 வயது) சகோதரி சுவ்வில் அவளது ஆறு வயது இரட்டைக்குழந்தைகள் நிக்கலஸ், டானியல் ஆகியோரையே பம்பர் சுட்டுக்கொன்றிருக்கிறான்.

சுமார் 4லட்சத்து 36 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியான தோட்டம் ஒன்றை பெற்றோரிடமிருந்து அபகரிக்கவே அவன் இந்தப் படுபாதகச் செயலில் ஈடுபட்டானாம். (உ)

# அக்கினோவுக்கு அமெரிக்கா ஆதரவு

வாஷிங்டன், நவ. 1

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரஸின் அக்கினோவுக்கு முழு அளவில் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

பிலிப்பீன்ஸ் பாதுகாப்பு அமைச்சர் ஜுன் பொன்ஸ் என்றில்ஸ் பதவியிலிருந்து விலக்கப்பட்டதை அடுத்து பலத்த சர்ச்சை கிளம்பியிருக்கும் இந்த வேளையில் அமெரிக்கா இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## 11 சிபாரிசுகள்

புதுடில்லி, நவ. 1

உலக சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 11 விடயங்கள் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன.

ஏழு தென்கிழக்காசிய நாடுகளின் அமைச்சர் மட்டத்தில் சிறுவர் அபிவிருத்தி தொடர்பாக நடத்தப்பட்ட 'சார்க்' மாநாட்டின் முடிவிலேயே இந்த சிபாரிசு செய்யப்பட்டது. (உ)

# பரீட்சை முடிவுகள் இம்முறை சிறப்பாக இல்லை

## கல்விப் பணிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம் நவ. 2

வட பகுதியில் க. பொ. த. உயர்தர பரீட்சை முடிவுகளின் பெறுபேறுகள் இம்முறை எதிர்பார்த்தது போல் சிறப்பாக இல்லை என யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கூறினார்.

நேற்று முன்தினம் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கிடைத்த பெறுபேறுகள் தொடர்பான அவரது கருத்தை கேட்டபோதே எமது செய்தியாளரிடம் இவ்வாறு கூறினார்.

எமது மாணவர்கள் இக்கட்டான இச்சூழ்நிலையிலும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பரீட்சைக்குத் தம்மை ஆயத்தப்படுத்தியிருந்தனர்.

இந் நிலையிலும் சில மாணவர்கள் நல்ல பெறுபேறுகளை பெற்றுள்ளனர் அவர்களை நாம் பாராட்டுகிறோம்.

அதே வேளை மற்றைய மாணவர்கள்சோர்வடையாது எமது எதிர்கால கல்விச் செல்வத்தை காக்கும் முகமாக தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

பெற்றோர்களும் இதற்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்க வேண்டும் என்றார்.

### வடமராட்சியில்

பரீட்சைப் பெறுபேறுளில் கடந்த பல வருடங்களாக சாதனை புரிந்து வந்தவர்கள் வடமராட்சி மாணவர்கள். இம்முறை அவர்களின் பெறுபேறுகள் ஓரளவு குறைந்துள்ளது கவலைக்குரியது என்றார் வடமராட்சி பகுதி கல்லூரி ஒன்றின் அதிபர்.

முகாம்களுக்கு அருகில் உள்ள பல பாடசாலைகள் இயக்க முடியாதுள்ளன

பல மாணவர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

இதனால் பல மாணவர்கள் இம்முறை பரீட்சைக்கு தோற்றவில்லை; மாறாக தோற்றியவர்களுள் பலருக்கு உரிய முறையில் ஆயத்தம் செய்ய வசதி இருக்கவில்லை-இப்படிக் கூறினார் மற்றொரு அதிபர்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கணிதப் பகுதி மாணவன் நா. சுகந்தன். யாழ். இந்துக் கல்லூரி மருத்துவப் பகுதி மாணவன்ரி. சத்தியசீலன் ஆகியோர் 4 பாடங்களிலும் அதிவிஷேட சித்தியடைந்துள்ளனர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் இருவர் மூன்று பாடங்களில் அதிவிஷேட சித்தியடைந்துள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரியில் 4 மாணவர்களும் மகாஜனா கல்லூரியில் 3 மாணவர்களும் 3 பாடங்களில் விஷேட சித்தியடைந்துள்ளனர்.

யாழ் இந்துக் கல்லூரியில் இரண்டு மாணவர்களும், யாழ் இந்து மகளிர் கல்லூரியில் 5 மாணவிகளும், வேம்படி மகளிர் கல்லூரியில் ஒரு மாணவியும்; கொக்குவில் இந்துக் கல்லூரியில் 3 மாணவர்களும் இரு பாடங்களில் விசேட சித்தி அடைந்துள்ளனர். (உ-5)

# பாடசாலை தளபாடம் மழையில் நனைந்து பழுதாகும் நிலையில்

பலாலி, நவ.1

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்களது தளபாடங்கள் மழையில் நனைந்து பழுதாகும் நிலையில் உள்ளன.

இராணுவ முகாம் அமைந்துள்ள பாடசாலையின் சொந்தக் கட்டடங்களைப் போராளிகள் தகர்த்தபோது இத்தளபாடங்கள், இவ்வித்தியாலயம் தற்போது இயங்கும் புன்னாலைக்கட்டுவன் பாடசாலைக்கு போராளிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

உடைந்த கட்டடங்களில் இருந்து பொது மக்களால் எடுத்துச் செல்லப்பட்ட மரங்கள், யன்னல்கள், கதவு முதலியனவும் போராளிகளால் மீட்கப்பட்டு தற்காலிக கட்டடம் அமைப்பதற்காகப் பாடசாலையிடம் ஒப்படைக்கப்பட்டன.

தற்காலிககொட்டகையாவது அமைத்து உதவுமாறு பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு. எஸ். நாதன், யாழ். கல்விப்பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் (இ-119)

## சமய சந்நிதிகளில்

### கந்த சஷ்டி நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ-2

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று முதல் வெள்ளி வரை கந்தசஷ்டி விழா நடைபெறும்.

ஆறு தினங்களும் வித்துவான் ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதன் உரை நிகழ்த்துவார். (உ-எ)

*

யாழ்ப்பாணம் நவ-2

சுன்னாகம் அருள்மிகு கந்தசுவாமி கோயிலில் இன்று தொடக்கம் கந்த சஷ்டித் திருவிழா நடைபெறும்.

தினமும் பிற்பகல் 3.30 மணி முதல் சூரபன்மன் வதைப் படலம் படிக்கப்படும்.

பௌராணிக வித்தகர் திரு. கா. நமசிவாயம் விரிவுரை நிகழ்த்துவார்கள். வெள்ளிக்கிழமை சூரசங்கார உற்சவம் நடைபெறும். (உ)

* *

வல்வெட்டித்துறை, நவ-2

வல்லி தேவசேனா சமேத ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி (தீருவில் முருகையன்) ஆலயத்தில் இன்று பகல் 11.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் கந்த சஷ்டி விரதம் ஆரம்பமாகும்.

தினமும் பகல் 11.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கு அபிஷேகபூசை, ஆராதனைகள் வெகு சிறப்பாக நடைபெறும்.

வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு சூரசங்கார பூசையும் அடுத்த நாள் காலை 6 மணிக்கு பாறணைப் பூசையும் மாலையில் திருக்கல்யாண பூசையும் நடைபெறும். (உ-160)

### மரக்கன்று விநியோகம்

வல்வெட்டித்துறை, நவ 2

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மலிவு விலையில் தென்னை, மா, எலுமிச்சை, தோடைக்கன்றுகளை விநியோகம் செய்து வருகின்றது.

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக மேற்படி மரக்கன்றுகள் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. (உ-160)

## சேவை நலம் பாராட்டு

சாவகச்சேரி, நவ.2

மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியைகளாகக் கடமையாற்றி தமது ஆசிரிய சேவையினின்றும் ஓய்வு பெற்ற இரு ஆசிரியைகள் சேவை நலம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

திருமதி பொ. அன்னம்மா, திருமதி சி. விஜயரத்தினம் ஆகியோரே பாராட்டப்பட்ட ஆசிரியைகள் ஆவர்.

அதிபர் திரு. சி.பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில், ஆசிரியர்கள் பலர் பாராட்டுரைகள் வழங்கியதுடன் மதிய போசன விருந்தளித்து அன்பளிப்புகளும் வழங்கினர். (இ-31)

## வாசகர் திருமுகம்

# வாழை, தென்னைகளை அழிக்க வேண்டாம்

தமிழரின் உரிமைப் போராட்டம் உச்சக் கட்டம் அடைந்துள்ள இவ்வேளையில் தமிழ் மக்களின் உணவு உற்பத்தி ஒரு முக்கிய அம்சமாகின்றது. தென்பகுதியிலிருந்து தமிழ்ப் பகுதிகளுக்கு வரும் உணவு விநியோகம் தடைப்படும்போதோ அல்லது முற்றாகத் துண்டிக்கப்படும்போதோ எமது பற்றாக்குறையை நாமே சமாளித்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறோம்.

இன்று யாழ்ப்பாணத்தில் வாழைப்பழத்தின் விலை மிக அதிகம் என்பதை யாரும் உணர்வர். எமக்குத் தேவையான தேங்காய்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக வருடா வருடம் தென் பகுதியிலிருந்து தேங்காய் தருவிக்கப்படுவதையும், இரு வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் தேங்காய் ஒன்று ரூபா 10/- தொடக்கம் ரூபா 12/- வரை விற்கப்பட்டதையும் எவரும் இலகுவில் மறக்க முடியாது.

நிலைமை இவ்வாறிருக்கும்போது, சமீபகாலமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருவது என்ன? எந்தவொரு பொது வைபவத்தின்போதும் அது துக்க அனுஷ்டிப்பாக இருந்தாலும், மகிழ்ச்சிக்குரிய கொண்டாட்டமாக இருந்தாலும் வீதிகள் தோறும் நூற்றுக்கணக்கான வாழைகளும், ஆங்காங்கே தென்னங்கன்றுகளும் கொண்டு அலங்கரிக்கப்படுவது ஒரு 'பஷன்' ஆகி வருகின்றது.

சோடையடித்த (குருக்குத்தி) வாழைகளையும் தென்னைகளையும் இச்சோடனைகளுக்குப் பயன்படுத்துவதில் எந்தவித தவறும் கிடையாது.

ஆனால், அவ்வாறு இல்லாமல் குலை தள்ளிய நிலையிலும் (குலைகள் முற்றாமல்), குலை தள்ளும் பருவத்திலும், இளம் குட்டிகளாகவும் நூற்றுக்கணக்கான வாழைகள் வீதிகளை அலங்கரிக்கும்போது பார்ப்போர் உள்ளம் "இது என்ன அநியாயம்" என்றுதான் வேதனைப்படத் தோன்றுகிறது.

அதேபோல் வீதிகளின் நடுவே குழிகள் தோண்டி அவற்றில் தென்னம் கன்றுகள் நடப்பட்டிருப்பதைப் பார்க்கும்போதும் சிலரின் பொறுப்பற்ற செயல்களை எண்ணி அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. தோரணங்கள், மாவிலைகள், கறுப்புக்கொடிகள் என்பன எமது உணர்வுகளை வெளிக்காட்டப்போதுமானவை என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். மேலும் அவற்றால் பணச் செலவும் அதிகமாவதில்லை எவருக்கும் எதுவித பாதிப்பும் இல்லை.

எனவே, இனிமேலாவது எம் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் எமது பகுதிகளில் வாழைகளும் தென்னைகளும் பொறுப்பற்ற முறையில் அழிக்கப்படுவதையும், பொது வீதிகளின் நடுவே குழிகள் தோண்டப்படுவதையும், தடுத்து நிறுத்த ஒத்துழைப்பும் உதவியும் நல்குவார்கள் என எதிர்பார்ப்போமாக.

அ. வேதநாயகம்

யாழ்ப்பாணம்



## பொய்யாமொழி

குறள்:
பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

பொருள்:
ஒருவனுக்குப் பொய் இல்லாமல் வாழ்தலைப் போன்ற புகழ்நிலை வேறொன்று இல்லை; அஃது அவன் அறியாமலே அவனுக்கு எல்லா அறமும் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
Learn from the pioneers in computer education
Fees/ 1500/- (payable in installments)
Practicals in fully air conditioned environment for not less than 60 hours
**Cantabia Institute**
21, Main Street, Jaffna
T -Phone: 24201

# உதயன்

02 - 11 - 1986 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
Basic Language
6 Months — Weekends Classes
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T'Phone 24201

**அறிவித்தல்**

யாழ். சைனீஸ் றெஸ்ரோறண்ட்
முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இத்தாபனம்
இரவு 8.30 மணி வரை திறந்திருக்கும்
தொலைபேசி: 23460

**கண்டீர்களா ?**

கடந்த புதன்கிழமை (29-10-86) வவுனியாவிலிருந்து யாழ். வந்த இ. போ. சவில் முக்கியமான தஸ்தாவேஜுகளுடன் எனது பிரயாணப்பை காணமல்போய் விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் வ. கங்காதரன் – திருவடி நீழல்–புன்னலைக் கட்டுவன் தெற்கு, சுன்னுகம் என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் தரப்படும்.

# பெரியபோரதீவில்
# கைதான 60 பேர் எங்கே?

மட்டக்களப்பு, நவ. 2 பெரிய போரதீவுப் பகுதியில் நேற்றுக் காலை ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட 60 தமிழர்கள் எந்த ஆயுதப் படை முகாமில் வைக்கப் பட்டுள்ளார்கள் என்பது பற்றிக் கண்டு பிடிப்பதில் மட்டக்களப்புப் பிரசைகள் குழுவினரும் கல்முனைத் தமிழ்ப் பிரமுகர்களும் ஈடுபட்டுள்ளனர்.

கைதான அறுபது பேரும் கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகைக் கடைகளில் வேலை செய்பவர்கள். பெரியபோரதீவு வாசிகளான இவர்கள் கோயில் திருவிழா ஒன்றுக்காகப் பெரிய போரதீவு வந்திருந்த சமயமே ஆயுதப்படையினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

களுவாஞ்சிக்குடி வெல்லாவெளி, சென்றல் காம்ப் ஆகிய முகாம்களுக்கு இந்த 60 பேரும் கொண்டு செல்லப்படவில்லை.

எந்தமுகாமில் இவர்கள் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடியாத நிலையில் அவர்களின் உறவினர்கள் சிலர் மட்டக்களப்புப் பிரசைகள் குழுவிடம் நேற்று முறையிட்டனர்.

மட்டக்களப்பு பிரசைகள் குழுவினர் இன்று இது பற்றி விசாரிக்க இருக்கின்றனர்.

கொண்டைவெட்டுவான் ஆயுதப்படை முகாமில் இந்த 60 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பதை அறிந்து கொள்வதில் அம்பாறையில் உள்ள கூட்டணிப் பிரமுகர் திரு. ஆ. வேல்முருகு நேற்றிரவு ஈடுபட்டிருந்தார். (உ-எ)

# இன்று நல்லூரில் கந்தபுராண விழா

யாழ்ப்பாணம், நவ. 2 வட–இலங்கை செங்குந்த மகாஜனசங்கம் நடத்தும் கந்தபுராண விழா இன்று நல்லூர் திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சிகளுக்கு திரு. சி. கனகரத்தினம் தலைமைவகிப்பார்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி, கே, சிவஞானம் மங்கள விளக்கேற்றுவார்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகபரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்கள். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆத்மஜோதி முத்தையா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

தொடக்கவுரையை யாழ் பல்கலைக் கழக வைத்தியத்துறைத் தலைவர் டாக்டர் சிவஞான சுந்தரம் நிகழ்த்துவார்.

''புராணநோக்கில்கந்த புராணம்'' பற்றிய அறிமுகவுரையை கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் நிகழ்த்துவார்.

பிற்பகல் 3–30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார்.

கருத்தரங்கில் பின்வருவோர் உரையாற்றுவர்.

1, இந்துநாகரிகத் துறை விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் — ''கந்தபுராணமும் சைவசித்தாந்தமும்''

2. தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் — ''தமிழர் பண்பாட்டில் கந்தபுராணம்''

3. தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா ''காப்பிய நோக்கில் கந்த புராணம்''

4. திரு. ஆ. சு. செல்வரத்தினம், பி. எஸ், சி. —''வரலாற்று நோக்கில் கந்தபுராணம்'' (உ–எ)

## காயமடைந்த கொமாண்டோக்கள்

மட்டக்களப்பு, நவ. 2 பெரிய போரதீவில் நடத்தப்பட்ட நிலக் கண்ணித் தாக்குதலில் படுகாயமடைந்த 8 கொமாண்டோக்கள் வெள்ளி இரவு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

**பணிவான வேண்டுகோள்**

புங்குடுதீவு, சிவலபிட்டி சனசமூக நிலைய அன்னதான சபை ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய,அன்னதான மண்டப கட்டிட நிதிக்காக 31–10–86 நடாத்த இருந்த அதிஸ்ட லாபச்சீட்டிழுப்பு ரிக்கற் விற்பனை செய்து முடியாத காரணத்தாலும் விற்பனைக்குக் கொடுத்த ரிக்கற் புத்தகம் திருப்பி ஒப்படைக்காத காரணத்தாலும் எதிர் வரும் 15–11–86 திங்கட்கிழமை அதிஸ்டம் பார்க்கப்படும் என்பதை அதிஸ்டலாபச் சீட்டு பெற்றுக்கொண்டவர்களுக்கும் விற்பனை செய்த அனைவருக்கும் பணிவாக அறியத் தருகிறோம்.

இப்படிக்கு
அன்னதான சபைத் தலைவர்
து. சேதுபதி
சி. ச. ச. நிலையம்.
31-10-86.

### தமிழர்---
(1–ம் பக்கத்தொடர்ச்சி)

ஆண்டுக் கலவரங்களின் போது கிறிஸ்தவர் வாழ்ந்த பகுதிகள் தமிழர்களுக்குப் பாதுகாப்பான பிரதேசமாக விளங்கியது.

ஆனல் பின்னர் இடம் பெற்ற கலவரங்களின் பொழுது இப்பகுதிகளிலும் வன்முறை நிகழ்ந்தன. கிறிஸ்தவ சிங்களவர்கள் கூட இவற்றுள் பங்குபெற்ருர்கள் என்பது வேதனை தருகிறது.

எனவே இருதரப்பாரிடையேயும் இரு சமூகங்களிடையேயும் நேச உணர்வைக் கட்டி எழுப்ப நாம் முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். இவ்வாறு வண. பிதா. கஸ்பேர்ஸ் தனது பேச்சில் கூறினர். (உ – 9)

# தமிழ் மக்கள் பக்கம் நியாயம் இருக்கிறது

## வண. பிதா உரை

யாழ்ப்பாணம், நவ. 2 தமிழ் மக்களின் பக்கம் நியாயம் இருக்கிறது. அவர்கள் கோரிக்கை நீதியானது. அவர்கள் மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கிருர்கள் என்பது எமது நிலைப்பாடாகும்.

கொழும்பிலிருந்து வந்த வண. பிதா யோகன் தேவானந்தா இப்படிக் கூறினர்.

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க நினைவு தினக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது.

கத்தோலிக்க திருச்சபை தொழிலாளர்கள், விவசாயிகள், நலனுக்கும், மனித உரிமைகளுக்காகவும் குரல்கொடுக்க முன் வருதல் வேண்டும்.

வழிபாடு அவசியமானலும், செயலும் வேண்டும்.

போராட்டம் அவசியம். போராட்டத்தில் ஈடுபடும்போது அன்பு என்ற வரம்பை நாம் மீறக்கூடாது.

வன்செயலில் ஈடுபடுபவர்கள் எல்லாரும் குற்றவாளிகள் அல்லர். அவர்களுள் தீவிரவாதிகள் இருக்கிருர்கள். உரிமைக்காகப் போராடும் போராளிகள் உள்ளனர். பயங்கரவாதிகளும் இருக்கிருர்கள்.

இதனை உணராமல் இப்பிரச்சினையைக் கையாள்வதால் தான் சங்கடம் ஏற்படுகிறது.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர், விவசாயிகள் தமது காணி சுவீகரிப்பைக் கண்டித்துக் கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். அம்மகஜரை ஊர்வலமாகச் சென்று ஜனதிபதியிடம் கையளிக்க விரும்பினர்கள்.

அப்போது ஜனதிபதி கூறிய பதில் உங்களுக்கு வியப்பைத்தரும். இத் தூதுக்குழுவைச் சந்திக்கத் தனக்கு நேரமில்லை என்று விட்டார் அவர்.

ஆனல் அன்றிரவு எழுபது வயதைத் தாண்டிய ரோயல் கல்லூரி பழைய மாணவர்கள் விருந்து வைபவத்தில் கலந்து கொள்ள ஜனதிபதி ஜே. ஆருக்கு நேர அவகாசம் இருந்தது.

—இப்படி அவர் கூறினர். (உ-2)

**அர்ச்சுன**

**வாசகர்களே!**

எண் சிலம்பம் போட்டி இல: 1 முடிவு திகதி 15 - 11 - 86 வரை பின்போடப் பட்டுள்ளது. நீங்களும் அதில் பங்குபற்றி உங்கள் கணித அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**விற்பனைப் பெண்கள் தேவை**

தேயிலை, சவர்க்காரம் போன்ற பொருட்களை வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வதற்கு விற்பனைப் பெண்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். நகரின் சுற்றுடலில் வசிப்பவர்கள் ஆகவும், ஐநூறு ரூபாய் (500/–) முற்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களுக்கு:
நியூ எஸ். கே. பிரிண்டிங் வேக்ஸ்,
No. 7, மின்சார நிலைய வீதி, (2–ம் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

**கேள்விப்பத்திரம்**

பழைய பத்திரிகைகள் விற்பனைக்கு உள்ளன. கேள்விப்பத்திரங்களை 10 – 11 – 86 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

விளம்பர எண் — 37
மே/பா. உதயன்
த. பெ. எண்: 23,
யாழ்ப்பாணம்.

**நன்றி நவிலல்**

**டாக்டர் நா. இராஜகுலசிங்கம்**

எமது மகன்,

டாக்டர் நா. இராஜகுலசிங்கம் 13-09-86 ஆந் திகதி சவூதி அரேபியாவில் காலமானுர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01–11–86 ஆந் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்றன. நேர்முகமாகவும், கடிதங்கள் வாயிலாகவும் எங்கள் துன்பத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

திரு. திருமதி நாகமணி
எல்லை வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

● கனடா
● ஜெர்மன்
● இத்தாலி
● ஹொலண்ட்
● பிரான்ஸ்
● அமெரிக்கா
● அவுஸ்திரேலியா

நம்பிக்கை வாய்ந்த பயணம்

**உடனடியாக**

தாமதமின்றித் தொடர்பு கொள்க.

எங்கள் சேவைகள்:

* எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
* துரிதமான பாஸ்போர்ட், விசா, பொண்ட் ஒழுங்குகள்
* CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
* இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

**ரெலிபோன் - ரெலெக்ஸ்**
முதல் தரமான சேவை
Open 24 Hours

**Mack Communications & Travels**
இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம். Tele:- 24791, 24836

**யாழ்.-கொழும்பு விமான சேவை**
ஊரிக்கு விசேட போக்குவரத்து வசதிகளுடன்
ஒழுங்காக நடைபெறுகிறது
உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்க.

தாதி மார்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
5 வருட அனுபவமுள்ள பெண் தாதிமார்கள்
எம்முடன் உடன் தொடர்புகொள்ளவும்

நாளை
எமது மூன்ருவது மாபெரும்
**வீடியோ வெளியீடு!**
ரஜனிகாந்தின்
மாபெரும் வெற்றிச் சித்திரம்
★ மா வீரன் ★
( தரமான பிரதி )

**Agfa**
**LANKA PROCESSING LTD.**
இன் வாரிசிலான கூட்டமைப்பில் உள்ள
**HAYLEYS PHOTO PRINT LTD**
என்னும் ஸ்தாபனத்தை
380, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் (அடைக்கலமாதா கோயில் அருகாமை) ஆரம்பித்துள்ளது.
AGFA COLOUR XR
அல்லது
AGFA COLOUR XR 100 II
புகைப்படச் சுருள்களில் இருந்து அஞ்சல் அட்டைப் பிரதி ஒன்றைப் பெற
ரூபா 4 - 50 மட்டுமே அறவிடப்படும்.
மற்றெல்லாப் புகைப்படச் சுருள்களில் இருந்து
அஞ்சலட்டைப் பிரதி ஒன்றிற்கு ரூபா 6-00 அறவிடப்படும்.
STUDIOக்களுக்கு அதிவிசேட கழிவுகள் உண்டு.
மூன்று நாட்களில் பிரதிகளைப் பெறலாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவெட்) லிமிட்டட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 02 – 11 – 1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd15, Second Lane. Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Number QJ60N 86.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org